IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 76/2020

Deposition of witness for PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முகேஷ் | Caste | : | |
| Father Name | : | வேலு | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of February, 2025.

Cross Examination:

1. நான் இவ்வழக்கில் வாதியின் மகன். என் அப்பா இவ்வழக்கு சொத்தை கிரையம் பெற்றதாக கூறும் 28.02.2000 ல் எனக்கு 10 வயது என்றால் சரிதான். நான் ITI வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2 ல் நான் கிரையம் பெற்றதாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

2. மேற்படி எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் என் அப்பா சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் என் அப்பாவிற்கு தான் தெரியும் என்றால் எனக்கும் தெரியும். என் அப்பா கிரையம் பெற்றதாக கூறும் 28.02.2000 தேதியிட்ட கிரையப்பத்திரத்தை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆனது எந்த தேதி, மாதம், வருடம் என்று கூற இயலுமா என்றால் 05.01.1998 ஆகும். மேற்படி வா.சா.ஆ.1 யை தான் என் அப்பா கிரையம் பெற்ற வழக்கு சொத்து என்று நான் கூறுகிறேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2 ல் ஆவண எண்.788/2000 தேதி 28.02.2000

என்று கூறியுள்ள ஆவணம் வா.சா.ஆ.1 அல்ல என்றும் வா.சா.ஆ.1 வேறு தேதியிட்ட வேறு பதிவு எண் கொண்ட ஆவணம் என்றால் சரிதான்.

4. மேற்படி வா.சா.ஆ.1ல் சொத்து விவரத்தில் எந்த சர்வே எண்ணிற்கு வடக்கு திசையில் வழக்கு சொத்து உள்ளது என்று குறிப்பிடாமல் கோடிடப்பட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாற்புற எல்லைகள் குறிப்பிடாததால் வா.சா.ஆ.1 ஒரு முழுமையடையாத ஆவணம் என்றால் சரிதான். இவ்வழக்கை என் அப்பா யார்யாருக்கு எதிராக போட்டுள்ளார் என்றால் 1. அனிதா, 2. பழனி, 3. தேவராஜ், 4. மகாதேவி, 5. பாலகிருஷ்ணன், 6. காசி மற்றும் 7. வெங்கடேஷ் ஆகியோர் மீது போட்டுள்ளார்.

5. 1ம் பிரதிவாதி அனிதா கடந்த 8 ஆண்டுகளாக வழக்கு சொத்து உள்ள தொண்டான்துளசி கிராமத்தில் வசிக்கவில்லை என்றும் கரசமங்கலத்தில் வசித்து வந்து தற்போது காட்பாடியில் வசித்து வருகிறார் என்றால் இல்லை. நான் 1ம் பிரதிவாதி 8 வருடங்களாக வழக்கு சொத்து உள்ள தொண்டான்துளசி கிராமத்தில்தான் வசித்து வருகிறார் என்று கூறும் கூற்று இவ்வழக்கிற்காக பொய்யாக நான் கூறுகிறேன் என்றால் இல்லை.

6. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் வழக்கு சொத்து உள்ள இடம் பிள்ளையார் கோயில் தெரு என்றும் பிரதிவாதிகள் 2,7 ஆகியோர் பஜனை கோயில் தெருவில் உள்ளனர் என்றும், அவர்கள் குறுக்கு வழியில் பிள்ளையார் கோயில் தெருவிற்கு போகவர சட்டத்திற்கு புறம்பாக முயற்சி செய்கின்றனர் என்று கூறியுள்ள சங்கதியை இவ்வழக்கில் வாதியே வாதுரையிலும் அவரது சாட்சியத்திலும் கூறியிருக்காதபட்சத்தில் நான் மேற்கூறிய சங்கதிகளை இட்டுக்கட்டி

இவ்வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் இல்லை.

7. ஊரில் உள்ளவர்கள் தொண்டான்துளிசி கிராம வடபுறத்திலிருந்து தென்புறத்திற்கு சுடுகாட்டிற்கு செல்ல சரியான பாதை இல்லாததால் அவர்களுடைய நிலங்களை மேற்படி பாதைக்காக கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளனர் என்றால் சரிதான். என் அப்பா மேற்படி பாதைக்காக நிலத்தை கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

8. இவ்வழக்கின் பிரதிவாதிகள் 1. அனிதா, 2. பழனி மற்றும் 7. தேவராஜ் ஆகியோரின் நிலங்கள் வழக்கு சொத்திற்கு வடபுறத்தில் அமைந்துள்ளது என்றால் தேவராஜின் நிலம் வடபுறத்தில் உள்ளது, அனிதாவின் நிலம் கிழக்கு புறத்தில் உள்ளது, பழனியின் நிலம் எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கின் பிரதிவாதிகளும் மேற்படி சுடுகாட்டு பாதைக்காக நிலங்களை கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளனர் என்றால் சரிதான்.

9. மேற்படி பாதைக்காக பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டதை பொறுத்துக்கொள்ள முடியாமல் என் அப்பா பிரச்சனை செய்ததால் இராணுவத்தில் பணிபுரியும் 1ம் பிரதிவாதியின் கணவர் இராணுவ அதிகாரிகள் மூலமாக புகாரை அளித்து அதன்படி மாவட்ட ஆட்சியர் என் அப்பாவை விசாரணை செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாதைக்காக ஊர்க்காரர்களுடன் பிரதிவாதிகளும் நிலம் கொடுக்க ஒப்புக்கொண்டதால் பிரதிவாதிகளை பழிவாங்க வேண்டி என் அப்பா இவ்வழக்கை போட்டுள்ளார் என்றால் இல்லை.

10. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் கடந்த 27.3.2020 அன்று வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்ததை நானும் வாதியும் தடுத்துவிட்டோம் என்று கூறியுள்ள

சங்கதியை வாதியே வழக்குரையில் கூறவில்லை என்றும் மேற்படி எனது கூற்று பொய்யானது என்றால் இல்லை. வாதியின் வழக்குரையில் வாதிதான் வழக்கு சொத்தில் அனுபவம் செய்து வருகிறால் என்று கூறியுள்ள நிலையில் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3 ல் நானும் இந்த வழக்கின் வாதியும் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறோம் என்று கூறியுள்ளது பொய் என்றால் இல்லை.

11. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5 ல் கடந்த 25.9.2020 மற்றும் 26.9.2020 அன்று என்னுடைய நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள் என்று கூறியுள்ள நிலையில் என்னுடைய பேரில் நிலம் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டிய அவசியமே இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கு நான் 3ம் நபர் என்பதால் இவ்வழக்கிற்கு முகாந்திரம் உள்ளதா இல்லையா என்று கூற எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் இவ்வழக்கிற்கான பரிகாரத்தை நான் கோர அருகதையற்றவன் என்றால் சரியல்ல.

12. வாதி என் தந்தை என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எனவே எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை=இல்லை.

(Sd/-)..K.Venkatesan
DISTRICT MUNSIF
KATPADI